மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வாடிப்பட்டி, மதுரை மாவட்டம்.

முன்னிலை: திரு.D.ராம்கணேஷ் M.A., B.L.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி.
2021ம் வருடம் மார்ச் மாதம் 9ம் நாள் செவ்வாய் கிழமை
சார்வரி ஆண்டு மாசி மாதம் 25ம் நாள்

**I.A . No.622/2019**
**in**
**O.S. No. 43/2015**

1. அழகர்சாமி (இறப்பு)
2. கமலம்
3. செந்தில்குமார்.
4. லோகநாதன்
5. புவனேஸ்வரி
6. கலாவதி

..... மனுதாரர்கள்/வாதிகள்

//எதிர்//

1. ராஜம்மாள்(இறப்பு)
2. வெங்கடசாமி
3. V. கோவிந்தசாமி (இறப்பு)
4. ராணி
5. R. அமுதா
6. லதா

..... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

7. சரோஜா
8. வத்சலா
9. பாபி
10. சுஜாதா

.... எதிர்மனுதாரர்கள்/3ம் பிரதிவாதியின் வாரிசுகள்

இம்மனு 21.08.2019ம் தேதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் **திரு.A.R. சேதுபதி** அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் **திரு.R.A மோகன்ராம்** அவர்கள் ஆஜராகியும், 7 முதல் 10 எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டும், கடந்த 23.02.2021ம் தேதி இந்நீதிமன்றத்தில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, இருதரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடலான...

**உத்தரவு**

இம்மனு, காலவரையறைச்சட்டம் பிரிவு 5ன்படி, அசல் வழக்கில் இறந்து போன 3ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க, வாரிசு மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 1152 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து வாரிசு மனுவை ஏற்க அனுமதி வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:**

மனுவினை தாக்கல் செய்யும் 4ம் மனுதாரருக்கு 2ம் மனுதாரர் தாயார், 3ம் மனுதாரர் சகோதரர், 5,6 மனுதாரர்கள் சகோதரிகள் என்றும், மற்ற மனுதாரர்களுக்காக 4ம் மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்வதாகவும், 1ம் வாதி 1ம் பிரதிவாதிக்கு எதிராக தாவா சொத்தினைப் பொறுத்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாகவும், 2 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியின் வாரிசுகள் என்றும், அசல் வழக்கு நிலுவையில் இருந்தபோது, 3ம் பிரதிவாதி 01.07.2016ம் தேதியில் இறந்து விட்டதை 25.03.2019ம் தேதி வரை நீதிமன்றத்திற்கு அறிவிக்காமல், 21.06.2019ம் தேதியில் தான் எதிர்மனுதாரர்களின் வழக்கறிஞரால் 3ம் பிரதிவாதியின் வாரிசுகள் குறித்து மெமோ தாக்கல் செய்யப்பட், 12.07.2019ம தேதியில் தான் வாரிசு தொடர்பான விபரங்கள் தெரிவிக்கப்பட்டதால், 3ம் பிரதிவாதியின் வாரிசுகளை 7 முதல் 10 பிரதிவாதிகளாக சேர்க்க மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 1152 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து மேற்படி மனுவை ஏற்றுக்கொள்வது அவசியம் என்றும், இல்லாவிட்டால் மனுதாரர்களுக்கு பெருத்த இழப்பு ஏற்படும் என்பதால், இம்மனுவை அனுமதிக்கும்படி வேண்டப்பட்டது.

**2) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு எதிர் உரையின் சுருக்கம்:**

3ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் 3ம் பிரதிவாதி இறந்த விபரத்தை காலதாமதமாக தெரிவித்ததால் தான் 3ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்களை அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க காலதாமதமாக மனு தாக்கல் செய்யப்பட்டதாக மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் தவறானவை என்றும், மனுதாரர்கள் குடியிருந்து வரும் அதே கிராமத்தில், அடுத்த தெருவில் 3ம் பிரதிவாதி இறந்து விட்டதை மனுதாரர்கள் நன்கு அறிந்திருந்தும், வாரிசுதாரர்களை சேர்க்க கோரும் மனு 90 நாட்களுக்குள் அதாவது 29.09.2016க்கு தாக்கல் செய்ய வேண்டிய நிலையில், 1000 நாட்களுக்கு மேல் காலதாமதமாக மனு தாக்கல் செய்துள்ளது ஏற்கத்தக்கதல்ல என்றும், மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ள மேற்படி காலதாமதத்திற்கான காரணம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை என்றும், வழக்கு தரப்பினர்கள் இறந்ததற்கான வாரிசுகளை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டியது வழக்கின் வாதிகளே என்றும், 3ம் பிரதிவாதி இறந்து விட்டது தெரியாதது போல் இருந்து கொண்டு, மனுதாரர்கள் வழக்கு நடவடிக்கைகளை நன்கு அறிந்து கொண்டே எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் இருந்து விட்டு தற்போது இந்த வழக்கை இழுத்தடிக்கும் எண்ணத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், எனவே இந்த நிர் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவு வழங்க வேண்டப்பட்டது.

3) மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு அனுமதிக்கத்தக்கதா என்பதை தீர்வு காண வேண்டியது பொருண்மை ஆகும்.

**தீர்வு:-**

4) இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இந்த நிர் மனுவும் 3ம் பிரதிவாதி இறந்து விட்டதற்காக அவரது வாரிசுகளை உரிய காலத்திற்குள் வழக்கு தரப்பினர்களாக சேர்ப்பதற்கு 1152 நாட்கள் காலதாமதமாக மனு தாக்கல் செய்வதை மன்னித்து ஏற்றுக்கொள்ள கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. மனுதாரர்கள்/வாதிகளால் அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர தடையாணை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அசல் வழக்கு நிலுவையில் இருந்து வருகின்ற நிலையில், 1ம் பிரதிவாதி இறந்து விட்டதால், அவரது வாரிசுகளான 2 முதல் 6 பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும், இந்நிலையில், வழக்கானது மீண்டும் விசாரணை செய்ய திரும்ப அழைக்கப்பட்டதின் பேரில் விசாரணை தொடங்கப்பட்டபோது 3ம் பிரதிவாதி இறந்து விட்டார். ஆனால் அது தொடர்பான தகவல் பிரதிவாதிகள் தரப்பில் 25.03.2019ம் தேதி வரை நீதிமன்றத்திற்கு அறிவிக்காமல் 21.06.2019ம் தேதியில் தான் பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரால் 3ம் பிரதிவாதியின் வாரிசு தொடர்பான விபரங்கள் தெரிவிக்கப்பட்டது மற்றும் 12.07.2019ம் தேதியில் 3ம் பிரதிவாதியின் வாரிசுகளின் முகவரி தொடர்பான விபரங்கள் பற்றி தெரிவிக்கப்பட்டது என்றும், எனவே மேற்படி வாரிசு தொடர்பான விபரங்களை பெற்று இந்த மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்டுள்ள 1152 நாட்கள் காலதாமத்தை மன்னித்து மனுவினை அனுமதிக்கும்படி வாதுரைக்கப்பட்டது. மாறாக எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில், மனுவில் கண்டுள்ள விபரங்களை மறுத்ததோடு மனுதாரர்கள்/வாதிகள், பிரதிவாதிகள் வசித்தும் வரும் வீட்டிற்கு அருகிலேயே வசித்து வரும் நிலையில் 3ம் பிரதிவாதி இறந்து விட்ட விபரம் தெரிந்திருந்தும் அவருடைய வாரிசுகளை தரப்பினர்களாக சேர்க்க நடவடிக்கை எடுக்காமலும், மேற்படி 3ம் பிரதிவாதியின் வாரிசுகளை தரப்பினர்களாக சேர்ப்பதற்கு ஏற்பட்ட காலதாமதத்திற்கான சரியான காரணம் மனுவில் குறிப்பிடவில்லை என்றும், வழக்கு தரப்பினர்கள் இறந்து விட்ட நிலையில், அவரது வாரிசுகளை தரப்பினர்களாக சேர்ப்பதற்குரிய சட்டக்கடப்பாடு மனுதாரர்கள்/வாதிகளுக்கு உள்ளது என்றும், எனவே வழக்கு நடவடிக்கையை காலதாமதப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் தாக்கல் செய்யப்பட்ட இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்று எதிர்வாதம் செய்யப்பட்டது. இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டு ஆவணங்கள் பரிசீலனை செய்ததில், இந்த நிர் மனுவும் 28.08.2019ம் தேதியில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் 3ம் பிரதிவாதி 01.07.2016ம் தேதியில் இறந்து விட்டதாகவும், அது தொடர்பான தகவல் பிரதிவாதிகள் தரப்பில் 21.06.2019ம் தேதியில் தான் தெரிவிக்கப்பட்டதாகவும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் 3ம் பிரதிவாதி இறந்தது தொடர்பான அறிவிப்பு 25.03.2019ம் தேதியில் குறிப்பாணை மூலம் தெரியவந்ததாக மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் வழக்கு கோப்புகளை பரிசீலுனை செய்யும்போது, மேற்படி குறிப்பாணையும் பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் மூலம் மேற்படி 25.02.2019ம் தேதியில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் உள்ளது. மேலும் 3ம் பிரதிவாதியின் வாரிசு தொடர்பான விபரங்கள் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கோரி 25.04.2019 மற்றும் 12.07.2019 ஆகிய தேதிகளில்

குறிப்பாணை மூலம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் 3ம் பிரதிவாதியின் வாரிசு தொடர்பான விபரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. அதன்படி பரிசீலனை செய்யும்போது, 3ம் பிரதிவாதி இறந்ததற்கான தகவல் கடந்த 25.02.2019ம் தேதியிட்ட குறிப்பாணையின் மூலம் மட்டுமே நீதிமன்றத்திற்கு பிரதிவாதிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் பிரதிவாதிகள் தரப்பில் வழக்கு தரப்பினர்கள் இறந்து விட்டால் அவர்களுடைய வாரிசுகளை சேர்ப்பதற்கான சட்டக்கடப்பாடு வாதியையே சார்ந்தது என எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் வழக்கு தரப்பினர்கள் இறந்ததறற்கான வாரிசுகளை சேர்ப்பது குறித்து உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 22 விதி 10(A)ல் அடியிற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**Or 22 Rule 10-A -. Duty of pleader to communicate to Court death of a party. -** Whenever a pleader appearing for a party to the suit comes to know of the death of that party, he shall inform the Court about it, and the Court shall thereupon give notice of such death to the other party,and for this purpose, the contract between the pleader and the deceased party shall be deemed to subsist.)

எனவே மேற்கண்ட சட்டப்பிரிவுகளின்படி வழக்கு தரப்பினர் எவரேனும் இறக்கும் பட்சத்தில் அவர் தொடர்பான விபரங்களையும் அவரது வாரிசு தொடர்பான விபரங்களையும் நீதிமன்றத்திற்கு தெரியபடுத்த வேண்டியது இறந்த நபரின் தரப்பினர்களே என்பது சட்டக்கடப்பாடு ஆகும். எனவே எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் மேற்படி எதிர்வாதம் சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் 25.02.2019ம் தேதியில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் 3ம் பிரதிவாதி இறந்தது தொடர்பாக நீதிமன்றத்திற்கு குறிப்பாணை மூலம் வாதிகள் தரப்பிற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி கணக்கீடு செய்யும் பட்சத்தில் 25.05.2019ம் தேதியில் 3ம் பிரிவாதியின் வாரிசுகளை வழக்கு தரப்பினர்களாக சேர்ப்பதற்கான மனு தாக்கல் செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இந்த நிர் மனுவானது 28.08.2019ம் தேதியில் மேற்கண்ட மூன்று மாத காலம் கடந்து தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக உள்ளது. ஆனால் மனுதாரர்கள் தரப்பில் 3ம் பிரதிவாதி இறந்தற்கு மனு தாக்கல் செய்வதில் 1152 நாட்கள் காலதாமதம் எனக்குறிப்பிட்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே இருதரப்பு வாதுரைகள் மற்றும் வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்ததில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்ட 25.02.2019ம் தேதியில் இருந்து ஆறு மாத காலக்கட்டத்திற்குள் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. மேலும் இந்த நிர் அசல் வழக்கானது தாவா சொத்தினை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்து தொடர்பான அனைத்து வழக்கு தரப்பினர்களையும் கட்டுப்படுத்தி தீர்வு காண்பதே முடிவானதாகவும், இறுதியானதாகவும் இருக்கும் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

மேலும் இந்த நிர் மனுவும் காலதாமதத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், வழக்கு

நடவடிக்கையில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பிற்கு ஏற்பட்ட காலவிரையம் மற்றும் பொருளாதார விரையத்தை ஈடுசெய்யும்பொருட்டு ரூ.500/- செலவு தொகையாக செலுத்துவதின்பேரில் இம்மனு அனுமதிக்கக்கூடியது என்றே இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

இறுதியாக இம்மனு அனுமதிக்கப்படுகின்றது. இம்மனு நடவடிக்கையினால் எதிர் தரப்பினர்களுக்கு ஏற்பட்ட காலவிரையம் மற்றும் பொருளாதார விரையத்தை ஈடு செய்யும் பொருட்டு ரூ.500/- செலவுதொகை மனுதாரர்கள்/வாதிகள், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு 15.03.2021க்குள் செலுத்தப்பட வேண்டும்மென்ற நிபந்தனையின் பேரில் இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

பணம் செலுத்தப்பட்டதை பதிவு செய்வதற்கான அடுத்த கேட்பு நாள்: 16.03.2021

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் 2021ம் ஆண்டு மார்ச் மாதம் 09ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

(ஓம்.D.ராம்கணேஷ்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

//உண்மை நகல்//